GODDependence True freedom is being dependent on God செய்தி மடல்

ஜூலை | 2026



## யோவான் ஸ்நானகன் - இருள்சூழ் உலகில் எரிந்து பிரகாசிக்கிற விளக்கு

"அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான், நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்." யோவான் 5:35

இந்தியாவில் நம் வீடுகளில் மின்சாரம் வருவதற்கு முன்பு, பெரும்பாலான குடும்பங்கள் எண்ணெய் விளக்குகள் அல்லது அரிக்கேன் விளக்குகளைப் பயன்படுத்தினர். மக்கள் பாதுகாப்பாக நடக்கவும், சமைக்கவும், மற்றும் தங்கள் வேலைகளைச் செய்து முடிக்கவும் அவ்விளக்குகள் உதவின. எனினும், அவ்விளக்குகள் தற்காலிகமானவையே என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். அவை முறையாக எண்ணெய் ஊற்றி நிரப்பப்படவேண்டும், அதன் வெளிச்சம் மங்கி அணைந்துபோகும். காலை நேரம் சூரியன் உதிக்கையில், அந்த விளக்கு தேவைப்படாது. ஏனெனில் சூரிய வெளிச்சம் பிரகாசமானதாக இருக்கும்.

யோவான் ஸ்நானகனைப்பற்றி நினைக்கையில் உங்கள் மனதில் தோன்றும் பிம்பம் என்ன? "இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்." எல்லோரும் "மனந்திரும்புங்கள்" என அவன் அறைகூவல் விடுத்துக்கொண்டிருந்தான். தீர்க்கதரிசிகளே எழும்பியிராத நானூறு

வருடங்களில், யோவான் முதலாவது தீர்க்கனாக இஸ்ரவேலரிடத்தில் ஊழியம் செய்தான். அவன் “மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினான்” (மத்தேயு 3).

யோவான் 5:35-ல், இயேசு ஸ்நானகனாகிய யோவானை 'ஒளி' என்று குறிப்பிடாமல், ”எரிந்து பிரகாசிக்கிற ஒரு விளக்கு” என்று விவரிக்கிறார். இந்த வேறுபாடு மிகவும் முக்கியமானது. யோவான் நற்செய்தி முழுவதிலும், இயேசு மட்டுமே உண்மையான மற்றும் நித்தியமான ஒளியாக (யோவான் 1:9, 8:12) குறிப்பிடப்பட்டு இருக்கிறார், ஆனால் யோவான்ஸ்நானகன் ஒரு விளக்காக இருந்து, மற்றவர்களை கிறிஸ்துவை நோக்கி வழிநடத்தும் ஊழியத்தைச் செய்தார். விளக்குக்குத் தனக்கென சொந்த ஒளி எதுவும் இல்லை, அது பற்றவைக்கப்பட்டு விளக்கு ஏற்றப்பட்டால் மட்டுமே பிரகாசிக்கிறது. உலகின் உண்மையான ஒளியாகிய இயேசுவின் வருகைக்காக இஸ்ரவேல் மக்களை ஆயத்தப்படுத்தும் தேவனுடைய விளக்காக யோவான் செயல்பட்டார். வாக்குப்பண்ணப்பட்ட மேசியாவை மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில், மனந்திரும்புதலின் மூலம் அவர்களின் இருதயங்களை ஆயத்தப்படுத்துவதே அவருடைய பணியாக இருந்தது.

யோவானின் தைரியமான பிரசங்கத்தை மக்கள் விரும்பி கேட்டனர். அவருடைய துணிச்சலை அவர்கள் பாராட்டினர் மற்றும் அவருடைய பரிசுத்தமான வாழ்க்கையை மதித்தனர். அவர் பேசுவதைக் கேட்க பலர் நீண்ட தூரம் பயணம் செய்து வந்தனர். ஆனால் யோவான் இயேசுவைச் சுட்டிக்காட்டி, ”இதோ! தேவ ஆட்டுக்குட்டி” என்று அறிவித்தபோது, பலர் அவரை விட்டு விலகிச் சென்றனர். அவர்கள் அவர் பேசுவதைக் கேட்டு ரசித்தனர். ஆனால் அவர் பிரசங்கித்த இரட்சகரை நிராகரித்தனர்.

இன்றும் நம்முடைய சபைகளில் இப்படி ஒரு ஆபத்தான நிலை காணப்படுகிறதல்லவா? ஆன்மீக இருளில் நடப்பவர்களுக்கு வழிகாட்டும் வகையில் யோவான் ஸ்நானகன் கையில் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சிறிய விளக்காக இருந்தார். அவர் 'உலகத்தின் ஒளியாக' இருப்பவரைப் அதன் மூலம் மக்கள் ”வழியும் சத்தியமும் ஜீவனுமாக” இருப்பவரை மக்கள் காணும்படி செய்தார் (யோவான் 14:6). அநீதியும், அநியாயமும் மற்றும் ஆன்மீக இருளும் சூழ்ந்த உலகில், ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு விளக்காகத் இருக்கிறார். கிறிஸ்துவுக்கு உண்மையான சாட்சியாக இருப்பதே நமது அழைப்பு. விசுவாசிகளாகிய நாம், இந்த இருண்ட உலகில் ஒளி வீச அழைக்கப்பட்டிருக்கிறோம். மக்கள் நமது வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவர்கள் பரலோகத்திலிருக்கிற நம் பிதாவை மகிமைப்படுத்தவும், அவருடைய குமாரன் இயேசுவை அறிந்துகொள்ளவும் வேண்டும்.

நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு கிறிஸ்துவின் ஒளியைக் காட்டி, 'தேவனுடைய ஆட்டுக்குட்டியைப்' பற்றி சாட்சி பகரும் விளக்குகளாகத் திகழ தேவன் நமக்கு உதவுவாராக. “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத்தேயு 5:14-16).

**-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.**

சோதனைகள் இல்லாத ஒரு வாழ்க்கையை தேவன் நமக்கு வாக்குப் பண்ணவில்லை. எனினும், தம் வார்த்தையாகிய வேதாகமத்தின் மூலமாக நம் யுத்தங்களை எதிர்கொண்டு போராடுவதற்குத் தேவையான ஆயுதங்களை அவர் நமக்குத் தந்திருக்கிறார். - ஹீதர் பிக்ஸ்லர்

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஜூன் 21, சர்வதேச யோகா தினமாக அனுசரிக்கப்படுவதை நாம் அறிவோம். இன்றைய உலகில் மன அழுத்தமும், வாழ்க்கைமுறை சார்ந்த நோய்களும் அதிகரித்து வரும் நிலையில், உடல் நலம் மற்றும் மன அமைதிக்காக யோகா தியானம் போன்ற முறைகளை நாடுகிறார்கள். ஆனால், கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தியானம் என்பது முற்றிலும் வித்தியாசமானது. பரிசுத்த வேதாகமத்தில் அதனை தியானம் செய்வது குறித்த பல வசனங்கள் இருப்பினும், குறிப்பாக யோசுவா 1:8 மற்றும் சங்கீதம் 1:1-3 வசனங்களில் இரவும் பகலும் அதனை தியானிக்க வேண்டியதன் அவசியமும் அதனால் வரும் ஆசீர்வாதங்களும் கூறப்பட்டுள்ளன. வேதாகம தியானத்தின் முக்கிய கூறுகளை நாம் இங்கு காண்போம்.

**1. வேதாகம தியானம் - சுயத்தை அல்ல, தேவனுடைய வார்த்தையை மையப்படுத்துகிறது**

யோகா தியானம் போன்ற ஆன்மீக தத்துவங்கள் மனிதனைத் தனக்குள்ளே தெய்வீகத்தைத் தேடும்படி போதிக்கின்றன. அவை மனிதன் தன்னையே அறிந்து கொள்ளவும், தனக்குள்ளே இருக்கும் தெய்வீகத்தை உணரவும் ஊக்குவிக்கின்றன. ஆனால், வேதாகமம் நம்மை நமக்குள்ளே பார்க்கச் சொல்லவில்லை, மாறாக, பரிசுத்த வேதாகமத்தின் மூலம் தம்மை வெளிப்படுத்திய ஜீவனுள்ள தேவனை நோக்கிப் பார்க்கும்படி அழைக்கிறது. உண்மையை நாம் நமக்குள்ளே தேடிக் கண்டுபிடிப்பதில்லை, தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் கிருபையோடு வெளிப்படுத்தியதால், அந்த உண்மையை நாம் பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவ தியானமானது, மனதை வெறுமைப்படுத்தி, சுய உணர்வினுள் ஆழ்ந்து பயணிப்பது அல்ல, மாறாக, தேவன் தமது வார்த்தையில் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களை நினைவுகூர்ந்து, அவற்றை ஆழமாகச் சிந்தித்து, தன்வாழ்க்கையில் பிரயோகிப்பதாகும்.வேதாகமத்தின்படியான தியானம் என்பது பரிசுத்த வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள

ஆத்துமாக்களை இரட்சிப்பது தேவனுடைய வார்த்தையே தவிர, தேவ வார்த்தையின் மீதான நமது கருத்து அல்ல. தேவனுடைய வார்த்தை எல்லா புனிதமான முடிவுகளுக்குமான வல்லமை வாய்ந்தது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

சத்தியங்கள் எந்த அளவிற்கு நமக்குச் சம்பந்தப்பட்டவை என சிந்தனை செய்து அவற்றை நமதாக்கிக் கொள்ளுதலைக் குறிக்கிறது.

சுயத்தை மையப்படுத்தும் யோகா தியானத்திற்கும், வேதத்தை மையப்படுத்தும் கிறிஸ்தவ தியானத்திற்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. யோகா தியானம் "மனிதனை கடவுளோடு இணைக்க முன்படும் முயற்சி" ஆகும். அது தியான முயற்சிகளினால் மனிதனே இறைநிலையை அடைய முடியும் என்ற கருத்தை முன்வைக்கிறது. இது "நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்" (ஆதி.3:4) என்ற சாத்தானின் வஞ்சனையை நமக்கு நினைவூட்டுகிறது. ஆனால் வேதாகம தியானமோ, "வேதத்தின் மூலம் தேவன் நம்மோடு பேசுகிறார், ஜெபத்தின் மூலம் நாம் அவரோடு உறவாடுகிறோம்" என்ற உண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

### 2. வேதாகம தியானம் - மன அமைதியை மட்டுமல்ல, தேவனுக்குக் கீழ்ப்படிதலையும் உருவாக்குகிறது

பலர் தியானத்தை மன அமைதிக்கான ஒரு கருவியாக மட்டுமே பார்க்கிறார்கள். ஆனால், வேதாகம தியானம் வெறும் மன அமைதிக்கும் அப்பால் செல்கிறது. கிறிஸ்தவ தியானத்தின் உயர்ந்த நோக்கம் உடல் நலனை மட்டுமல்ல, ஆவிக்குரிய நலனை முதன்மைப்படுத்துகிறது. "சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது, தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளது" (1 தீமோ. 4:8). யோகா தியானம் உடல் ஆரோக்கியத்தையும் மன அமைதியையும் மட்டுமே மையப்படுத்துகிறது. ஆனால் வேதாகம தியானமானது, மனிதனின் பாவப்பிரச்சனையை சுட்டிக்காட்டி, இயேசுகிறிஸ்துவின் மூலமான இரட்சிப்புக்கு வழிநடத்துகிறது. இது மன அமைதியைத் தாண்டிய பாவவிடுதலையின் உண்மையான சமாதானத்தைத் தருகிறது.

வேதாகம தியானத்தின் நோக்கம் வெறுமனே மன அமைதியையோ, உணர்ச்சி ரீதியான ஆறுதலையோ பெறுவது மட்டுமல்ல. தேவனை நம்புகிறவர்களுக்கு அவருடைய சமாதானம் நிச்சயமாகக் கிடைக்கிறது. ஆனால், வேதாகம தியானத்தின் முதன்மை நோக்கம் தேவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் வாழ்க்கையை மாற்றுவதாகும். வேதாகமம் ஒருபோதும் தியானத்தை பரிசுத்தமான வாழ்க்கையிலிருந்து பிரித்துப் பேசுவதில்லை. தேவனுடைய வார்த்தை நமது அறிவை வளர்ப்பதற்காக மட்டுமல்ல, நமது குணநலன்களை மாற்றுவதற்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் வேதவசனங்களை தியானிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நமது பாவங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார், நமது ஆசைகளைப் புதுப்பிக்கிறார், நமது தீர்மானங்களை வழிநடத்துகிறார்,

பிதாவாகிய தேவன் நமக்குக் கொடுக்க விரும்பும் வாழ்க்கையை நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைக் காட்டுவதற்கான அவருடைய அறிவுறுத்தல் கடிதமே பரிசுத்த வேதாகமம் ஆகும்.

மேலும், நம்மைக் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றுகிறார்.

### 3. வேதாகம தியானம் - தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும் நிலையான வெற்றிக்கும் வழிநடத்துகிறது

"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக, இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்." (யோசுவா 1:8) என்னும் வார்த்தைகள் நமக்கு ஒரு அற்புதமான வாக்குறுதியைத் தருகின்றன: வேதத்தில் தியானிப்பதன் மூலம், நாம் தேவனுடைய வழிநடத்துதலைப் பெற்று, நமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் வெற்றியை அடைகிறோம். இங்கு 'வெற்றி' என்பது உலகம் காணும் வெற்றி மட்டுமல்ல, அது தேவனுடைய சித்தத்தோடு ஒத்துப்போகும் பூரண வாழ்க்கையின் வெற்றியாகும். 'உன் வழிகளைக் காத்துக்கொள்வாய்' என்பது, தியானம் நம்மை தவறுகளிலிருந்து காத்து, சரியான பாதையில் நடத்துகிறது என்பதைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையில் தியானிப்பவன், தனது சொந்த ஞானத்தில் நடக்காமல், தேவனுடைய ஞானத்தில் நடக்கிறான். இதுவே உண்மையான வெற்றிக்கான அடிப்படையாகும்.

சங்கீதம் 1:2-3 இந்த உண்மையை இன்னும் அழகாக விளக்குகிறது: "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்." "நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய்" மற்றும் "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" என்ற வார்த்தைகள் தியானத்தின் பலனைப் பற்றிய தேவனுடைய உறுதியான வாக்குத்தத்தங்கள். வேதாகமம் சொல்லும் இந்த உண்மையான வெற்றி என்பது உலகப் புகழோ அல்லது பொருளாதார முன்னேற்றமோ அல்ல, மாறாக, தேவனுடைய சித்தத்தின்படி வாழ்ந்து, அவருடைய ஞானம், வழிநடத்துதல், மற்றும் ஆசீர்வாதங்களை வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அனுபவிப்பதாகும்.

கிறிஸ்தவ தியானமானது, சுயத்தை அல்ல, தேவனுடைய வார்த்தையை மையப்படுத்துகிறது, மன அமைதியை மட்டுமல்ல, தேவனுக்குக் கீழ்ப்படிதலையும் உருவாக்குகிறது, தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும் நிலையான வெற்றிக்கும் வழிநடத்துகிறது. நாம் இரவும் பகலும் வேதத்தில் தியானித்து, அதன்படி நடக்கும்போது, நமது வாழ்க்கை உண்மையான அர்த்தமும், நித்திய மதிப்பும் பெற்று விளங்கும். யோகா தியானம் போன்ற உலகப் பார்வைகளுக்கு மத்தியில், கிறிஸ்தவர்களாக நாம் வேதத்தின் மீது


தேவனுடைய ஆவியானவரால் திறக்கப்பட்ட கண்களால் மட்டுமே காணக்கூடிய ஆவிக்குரிய உண்மைகளால் பரிசுத்த வேதாகமம் நிறைந்திருக்கிறது. - புரூஸ் ஹார்ட்

உறுதியான நம்பிக்கையோடு நின்று, ”வேதம் நமது தியானமாகட்டும்”ஜெபம் நமது பயிற்சியாகட்டும்” என்ற உன்னத உண்மையில் வாழ்வோமாக.

15 ஜூலை 2026 முதல் வேத தியானக் குழுக்கள் (Bible Meditation Groups) ஆரம்பிக்கின்றன. ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற ”வேதாகமத்தை தியானித்தல்: ஏன் எப்போது எப்படி?” மே மாதத்தில் ”பல்வேறு வேத தியான முறைகள்” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்குகளின் தொடர்ச்சியாக பலரும் நமது வேத தியானக் குழுக்களில் உற்சாகமாக இணைந்து வருகின்றனர். இந்த வேத தியான குழுக்கள் தொடர்ச்சியாக நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜூலை 2026 மாத வேத வாசிப்பு சவால்கள் (BRC) குழுக்களில் spam பிரச்சனைகளையும் தாண்டி கடந்த வருடம் போலவே தற்போது 750 க்கும் மேற்பட்டோர் இணைந்து வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மாதத்தில் 27 ஜூன் 2026 அன்று தெலுங்கு மொழியில் 4 மணிநேர தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி (Bible Readathon) நடைபெற்றது. இந்த மாத்தில் 31 ஜூலை 2026 அன்று அது மலையாள மொழியில் நடைபெற உள்ளது.

மாதந்தோறும் வெளிவரும் நமது செய்திமடல்களை நீங்கள் தவறாமல் வாசிப்பீர்கள் என நம்புகிறோம். இந்த செய்திமடல்கள் அதன் உள்ளடக்கங்கள் குறித்த உங்கள் கருத்துக்களை அவ்வப்போது எங்களுக்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**



## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

**நமது தரிசனம்**

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

**நமது பணித்திட்டம்**

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது. - சங்கீதம் 147:15

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - ஜூலை 2026

## துதிப்போம்:

1. 2026 ஜூன் மாத இறுதியில் தங்களுடைய வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காக ஆண்டவரைத் துதிப்போம்.

2. 2026 ஜூன் 27 ஆம் தேதி தெலுங்கு மொழியில் Bible Readathon நடைபெற்றதற்கும், அதில் அநேகர் கலந்துகொண்டு வேதத்தை வாசித்து ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்தியதற்காகவும் தேவனுக்கு நன்றி சொல்லுவோம்.

3. 2026 ஜூன் 8 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் வேதவாசிப்புச் சவாலில் (CBRC) அநேக பிள்ளைகள் இணைந்து வேதத்தை வாசித்து, வசனங்களை மனனம் செய்து வருவதற்காகவும், பிள்ளைகளைக் குறித்து பெற்றோர் கொடுக்கும் சாட்சிகளுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

4. 2026 ஜூலை மாதத்தில் புதிதாக Nepali மொழியில் வேதவாசிப்பு சவால் குழுக்கள் ஆரம்பிக்க ஆண்டவர் கிருபை செய்ததற்காக நன்றி சொல்லுவோம்.

5. 2026 ஆம் ஆண்டில் படிப்பு, வேலை, குடும்பம், ஊழியம், தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் எத்தனையோ ஏற்ற இறக்கங்களைச் சந்தித்திருந்தாலும், ஆறு மாதங்களைக் கடந்து ஏழாம் மாதத்தைக் காண ஆண்டவர் கிருபை செய்ததற்காக நன்றி சொல்லுவோம்.

## ஜெபிப்போம்:

1. 2026 ஜூலை மாத வேதவாசிப்புக் குழுக்களில் இணைந்து வேதாகமத்தை வாசித்து வருபவர்கள், உரிய கால அளவில் தங்களுடைய வாசிப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்யும்படி ஜெபிப்போம்.

2. 2026 ஜூலை மாதத்திற்குத் திட்டமிடப்பட்டிருக்கும் தொடர் வேதவாசிப்பு நிகழ்வுகளும் தேவனை மகிமைப்படுத்தும்படி அநேகருக்கு பிரயோஜனமாக இருக்கும்படி ஜெபிப்போம்.

3. வேத தியான குழுக்கள் இந்த மாதம் 15 ம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வரவும் அவை தொடர்ச்சியாக நடைபெறவும் ஜெபிப்போம்.

4. சிறு பிள்ளைகளும், இளம் வாலிபர்களும் தடம் மாறிப்போகாமல், கர்த்தருடைய அன்பை ருசிக்கவும், தேவனுக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படியவும் வேண்டி ஜெபிப்போம்.

5. சிகிச்சையில் இருக்கும் ஒவ்வொருவரும் விரைவில் பூரண சுகம் அடையவும் குடும்பங்களில் சமாதானம் நிலவவும் ஜெபிப்போம்.

கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது.
- சங்கீதம் 119:89

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்



## முழக்கம்: 5. தேவ மகிமை மட்டுமே! (Glory of God alone!)

"மனிதனின் முடிவான நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதே!" இது உன்னதமான இறையியல் கூற்றுக்களில் ஒன்று. எனவேதான், "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் தேவ மகிமைக்கென்றே செய்யுங்கள்" என்றெழுதினார் பவுலடியார் (1 கொரிந்தியர் 10:31). சாப்பிடுவது கூட விதிவிலக்கல்ல என்றால், தேவனை மகிமைப்படுத்தாத எதையுமே நாம் செய்யக்கூடாது.

அனைத்துக் காரியங்களிலும் தேவனுக்கே மகிமை சேர்ப்பதற்கு நிகரற்ற எடுத்துக்காட்டு கிறிஸ்துவின் வாழ்க்கையே. "உன்னதத்திலிருக்கும் தேவனுக்கு மகிமை" என்று அவரது பிறப்பின் போது பரம சேனைத்திரள் ஆர்ப்பரித்தது (லூக்கா 2:14). தமது சீடருக்குக் கற்பித்த ஜெபத்தை "இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் உம்முடையவை களே, ஆமென்" என்று இயேசு முடித்தார் (மத்தேயு 6:13). இயேசுவை ஒரு வழக்கறிஞன் "நல்ல போதகரே" என்று அழைத்தபோது, "என்னை நல்லவர் என்று நீ அழைப்பானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவர் ஒருவருமில்லையே" என்று உடனே பதிலளித்தார் (மத்தேயு 19:16,17). தமது பிதாவானவருக்கே உரிய மகிமையை இயேசு எவ்விதம் தொடாதிருந்தார், பாருங்கள்! திமிர்வாதக்காரன் ஒருவனை அவர் சுகமாக்கியபோது, "மனிதருக்கு இவ்வித அதிகாரம் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (மத்தேயு 9:8, லூக்கா 7:16). ஐந்தப்பம் இருமீனைக் கொண்டு ஐயாயிரத்திற்கும் அதிகமானோருக்கு இயேசு உணவளித்தபோது, மக்கள் அவரைப் பலவந்தமாய் இராஜாவாக்க முயன் றனர், "அவரோ தனித்திருக்கும்படி ஒரு மலைக்குச் சென்றுவிட்டார்!" (யோவான் 6:15). "பூவுலகில் நான் உம்மை மகிமைப்படுத்தினேன்" என்று தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் பிதாவுக்குமுன் இயேசு அறிக்கையிட்டார் (யோவான் 17:4). இயேசுவே கர்த்தரென்று முழங்கால் யாவும் முடங்குவதும் நாவு யாவும் அறிக்கையிடுவதும் முடிவாகப் "பிதாவாகிய தேவனுக்கு மகிமை உண்டாகவே" (பிலிப்பியர் 2:9,-11).

பிரியமானவரே, நமது வாழ்வில் பல உசிதங்கள் இருக்கலாம், ஆனால் அவை ஒன்றைக் குறித்தும் நாம் பெருமையடிக்கக்கூடாது. கர்த்தர் சொல்லுவதாவது: "ஞானி தனது ஞானத்தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம், பலசாலி தனது பலத்தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம், செல்வந்தன் தனது செல்வத்தைக் குறித்துப் பெருமையடிக்க வேண்டாம், பெருமிதம் கொள்பவன் நானே கர்த்தர் என்று என்னை அறிந்து உணர்ந்திருப்பதைக் குறித்தே மேன்மை பாராட்டட்டும்" (எரேமியா 9:23,24). இது புதிய ஏற்பாட்டில் இவ்விதம் எடுத்தாளப்பட்டிருக்கிறது:

“மனுவுடலிலுள்ள எவனும் தேவனுக்குமுன் பெருமையடிக்காதபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டட்டும்” (1 கொரிந்தியர் 1:29,31). விளையாட்டு வீரருக்கு இதோ ஒரு செய்தி: “விரும்புகிறவனாலும் அல்ல, ஒடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்” (ரோமர் 9:16). செருபாபேல் போன்ற கட்டிட வல்லநர்களுக்கு அதே விதமானதொரு செய்தி: “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, எனது ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (சகரியா 4:6,9). சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் வரம் பழைய ஏற்பாட்டு யோசேப்புக்கு அருளப்பட்டிருந்ததைப் பார்வோன் மெச்சியபோது, யோசேப்பு சொன்னது: “நான் அல்ல, தேவனே உத்தரவு அருளிச்செய்வார்” (ஆதியாகமம் 41:15,16).

சங்கீதம் 115:1இல் சங்கீதக்காரன் ஏறெடுத்த ஜெபத்தைவிட நறுமணமானதொன்று தேவனுக்கு முன் எதுவும் இருக்க முடியாது: “எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்!” இவ்வித இரட்டை அழுத்தம் தரும் இன்னும் சில திருவசனங்கள் இதோ: 1 நாளாகமம் 16:28, சங்கீதம் 29:1, 96:7. நமக்கு முடிசூட்டுவது தேவனே என்றாலும், அவர் ஒருவரே மகிமையும், கனமும், வல்லமையும் பெற் றுக்கொள்ளத் தகுதியானவராதலால், நமது தலைகள் அவரது பாதங்களிலேயே வைக்கப்படவேண்டும்! (வெளிப்படுத்தல் 4:4,10,11). நிருபங்களை எழுதும் வேளைகளிலும் இவ்வித மனப்பான்மையே அப் போஸ்தலரில் மேலோங்கியிருந்தது. அவர்கள் எழுதிக்கொண்டிருக்கும்போதே எவ்விதம் தேவனுக்கு மகிமை செலுத்தத் துடித்தனர் என்று பாருங்கள்: ரோமர் 11:36, கலாத்தியர் 1:15, 2 தீமோத்தேயு 4:18, எபிரெயர் 13:21, 1 பேதுரு 5:11. நிருபங்களை முடிக்குமுன்னரே “ஆமென்” என முழங்கினர்!

------------ தொடரும்

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய ”நான் நிற்கும் கன்மலை” என்ற நூலில்இருந்து)**

## வாசகர் வாய்ஸ்

இந்த செய்திமடலின் உள்ளடக்கங்களைச் சார்ந்த உங்கள் கருத்துக்கள், பின்னூட்டங்கள், சாட்சிகள் மற்றும் கேள்விகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படும் பதிவுகள் ஒவ்வொரு மாதமும் GODependence செய்திமடலின் வாசகர் வாய்ஸ் பகுதியில் வெளியிடப்படும்.

உங்கள் வாய்ஸ் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மாதமும் உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் எதிர் நோக்குகிறோம். +965 6596 2559

பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளை வாசிப்பதினால் மட்டுமல்ல, அவைகளை ஆராய்ந்து பார்த்து தேவனுடைய வார்த்தையை விலையேறப்பெற்ற பொக்கிஷமாக கருதுகிறோம். - ஹென்றி B. ஐரிங்

# சகேயு

## உண்மையான மனமாற்றத்தின் அடையாளங்கள்



(லூக்கா 19:1-10)

இயேசுவின் காலத்தில், வரி வசூலிப்பவர்கள் 'பாவிகள்' என்று கருதப்பட்டனர்.

சகேயு ஒரு தலைமை வரி வசூலிப்பவராக இருந்தான். இயேசு எரிகோ வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, சகேயு அவரைக் காண விரும்பினான், ஆனால் குள்ளமான உருவம் கொண்டவராக இருந்ததால், ஓடிச்சென்று ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அந்த இடத்திற்கு வந்தபோது, அண்ணாந்து பார்த்து, "சகேயுவே, உடனே கீழே இறங்கி வா. இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்" என்று கூறினார். அவன் உடனே கீழே இறங்கி இயேசுவை மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.

### மரத்தில் ஏறுவதில் அப்படி என்ன சிறப்பு?

செல்வந்தரான ஒரு வரிவசூலிப்பவர் ஒடிச் சென்று மரத்தில் ஏறுவது என்பது அக்காலத்தில் சமூக ரீதியாக விசித்திரமான அல்லது பொருத்தமற்ற செயலாகக் கருதப்பட்டது. ஆனால், தன் கௌரவத்தை இழப்பதைவிட இயேசுவைக் காண்பதே முக்கியம் என்று சகேயு கருதினான். இயேசு அவர் வீட்டிற்கு வந்தபோது, சகேயு எழுந்து நின்று, "இதோ ஆண்டவரே! என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், யாரையாவது ஏதேனும் ஏமாற்றிப் பறித்திருந்தால், அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்கிறேன்" என்று கூறினான். அதற்கு இயேசு, "இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு உண்டாயிற்று" என்று அறிவித்தார்.

இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்பவர் எவரும் மனமாற்றத்தின் அடையாளங்களை வெளிப்படுத்துவார்கள் – அதாவது இரக்கமுள்ள குணம் மற்றும் தாங்கள் செய்த பாவச் செயல்களுக்கு ஈடுசெய்தல் (இழப்பீடு வழங்குதல்) போன்றவை. யாக்கோபு 2:17 கூறுகிறது: "அப்படியே விசுவாசமும் கிரியை இல்லாதிருந்தால் தன்னிலே செத்ததாயிருக்கும்."

**இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்ட பிறகு, இத்தகைய மனமாற்றத்தின் அடையாளங்களை நீங்கள் வெளிப்படுத்தியுள்ளீர்களா?** இல்லையென்றால், நீங்கள் உண்மையான மனமாற்றத்தை அடைந்துள்ளீர்களா என்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் மனமாற்றம் உண்மையானது அல்ல என்பதை நீங்கள் உணர்ந்தால், உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, இயேசு கிறிஸ்துவை இப்போதே உங்கள் தனிப்பட்ட இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளலாம் (ரோமர் 10:9-10).

**– சகோ. பீட்டர் ஏ.ஆர்., பாலக்காடு, கேரளா.**

ஒருவர் இரட்சிக்கப்படுகிறார் அல்லது இரட்சிக்கப்படுவதாக சொல்கிறார் என்ற உண்மையின் அடிப்படையில் இயேசுவைப் பாவ இரட்சகர் என்று நம்பி நீங்கள் உங்கள் விசுவாசத்தைக் கட்டி எழுப்பவில்லை. மாறாக, ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உங்கள் விசுவாசத்தை உடையவர்களாக இருக்கிறீர்கள். இதிலே நீங்கள் உறுதியாக இருக்கிறீர்கள். - ஜான் அலெக்ஸாண்டர் டூவி

# GODependence

# வேத தியானக் குழுக்கள்

**“உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்.” -**
**சங்கீதம் 119:97**

✨ தேவனுடைய வார்த்தையை முறைப்படி தியானிப்பதற்கான ஒரு அருமையான வாய்ப்பு!

📌 உங்கள் வழக்கமான அனுதின வேதவாசிப்புடன், இதற்கென கூடுதலாக குறைந்தபட்சம் *30 நிமிடங்கள்* நேரம் ஒதுக்க வேண்டும்.

📌 *ஒருநாள் விட்டு ஒருநாள்* என்ற முறையில், வாரத்திற்கு *3 நாட்கள் மட்டுமே* வேத தியானப் பகுதிகள் பகிரப்படும்.

📌 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்த *வேத தியானக் குழுக்கள்*, தற்போது மீண்டும் *ஜூலை 2026 முதல்* ஆரம்பிக்கப்பட உள்ளன.





📌 தற்போது இந்த குழுக்கள் *தமிழ்* மற்றும் *ஆங்கிலம்* ஆகிய மொழிகளில் மட்டுமே உள்ளன. மற்ற மொழிகளில் விரைவில்...

👇 கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்புகளின் மூலம், உங்களுக்கு விருப்பமான மொழிக் குழுவில் இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

📖 மேலும் விவரங்கள், விளக்கங்கள் மற்றும் தேவையான பயிற்சிகள் குழுவில் பகிரப்படும்.




✨ _உங்கள் அனுதின வேதவாசிப்புடன், வேத வசனங்களை தியானிக்கும் வழக்கத்திற்குள் வர இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்._

🙏 *GODependence குழு*
📱 +965 65962559

**கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது. - சங்கீதம் 33:4**

”இன்றைக்கே உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பியுங்கள். அதை எடுத்து வாசிப்பதே உண்மையில் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டிய முறை ஆகும்.” - ஜே.சி. ரைல். உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.



**நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👩‍💼 "இந்த வேதாகம வாசிப்புத் திட்டம் தேவனுடைய வார்த்தையில் நான் வளரவும், அதை என் அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தவும் மிகவும் உதவியது. சவாலான சூழ்நிலைகளில் இது எனக்கு பெலனாக இருந்து, என் வாழ்க்கையிலும் என் குடும்பத்திலும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் வெளிப்படுவதற்கான வழியைத் திறந்தது." **– Ragit Binu**

🤵 "இந்தத் திட்டத்தின்படி வேதாகமத்தை வாசிக்க நம்மை அர்ப்பணிக்கும்போது, அது நமக்குள் உற்சாகம், அர்ப்பணிப்பு மற்றும் உண்மைத்தன்மையை வளர்க்கிறது. இதுவே என் தனிப்பட்ட அனுபவம். நான் உணராமலேயே, இந்த வேதாகம வாசிப்புப் பயணத்தின் மூலம் தேவன் என் வாழ்க்கையை வடிவமைத்து மாற்றி வருகிறார்." **– Beaulah Enoch**

👩‍💼 "இந்த வேதாகம வாசிப்புத் திட்டம் நடைமுறைக்கு ஏற்றதாகவும், எளிதில் நிறைவேற்றக்கூடியதாகவும் இருந்தது. அதனால் தினமும் கொடுக்கப்பட்ட வேதப் பகுதிகளை தொடர்ந்து, சரியான நேரத்தில் முறையாக வாசித்து நிறைவு செய்ய முடிந்தது." **– Christina Joseph**

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 ஆகஸ்ட் 2026 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴️ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴️ 11 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி, பெங்காலி அல்லது நேபாளி]

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஆகஸ்ட் 2026 முதல்

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✴ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✴ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✴ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✴ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✴ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

" எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

-̇ GODependence குழு

CLICK HERE » wa.me/96565962559

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! "

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

நான் எந்த அளவுக்கு வேதாகமத்தை அதிகமாக வாசித்து, இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்தறிகிறேனோ, அவ்வளவு அதிகமாக, கிறிஸ்தவம் பலவந்தமாகப் பரவாமல், மக்களைக் கவர்ந்திழுப்பதன் மூலமாகப் பரவுகிறது என்கிற உறுதியைப் பெறுகிறேன். - ஷேன் கிளைபொர்ன்

# GODependence வேதவாசிப்பு சவால்கள்

GODependence
True freedom is being dependent on God

## Bible Reading Challenges

### GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

ஆகஸ்ட் மாதத்திற்கான பிஆர்சி (BRC) சேர்க்கை நடைபெற்று வருகிறது


**முறையாக மற்றும் முழுமையாக வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

தேவனுடைய வார்த்தை சத்தியம் ஆகும். நீங்கள் பரிசுத்தமானவர்கள் என்றும் உங்கள் பரலோக தந்தைக்கு மிகவும் பிரியமானவர்கள் என்றும் அவருடைய சத்திய வார்த்தை சொல்கிறது.
- லிசா டெர்கர்ஸ்ட்

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 21

**வேதப்பகுதி: 2 பேதுரு**



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1→↓ | | | | 2→ | | |
| | ↓3→ | | | | 4↓ | 5↑ |
| | | ←6 | ■ | | | ■ |
| ■ | 7→ | | | | | |
| | | ←8 | 9↓ | ↓10↑ | | |
| | | ←11 | | | | |
| | | ←12 | | | | |
| 13→ | | | | ■ | | 14↑ |

### ➡️ இடமிருந்து வலம்

1. __க்கு இரையாக வானங்களும் பூமியும் வைக்கப்பட்டிருக்கிறது (4)
2. கக்கினதை தின்னும் (2)
3. ஜலப்பிரளயத்தினால் அழிந்தது (4)
7. கர்த்தருடைய நாள் இரவிலே __ வருகிற விதமாய் வரும் (4)
13. அநீதத்தின் கூலியை விரும்பினவன் (4)

### ⬅️ வலமிருந்து இடம்

6. ___யுடன் கூட்டி வழங்க வேண்டியது தேவபக்தி (3)
8. இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமான் (3)
11. சுய___களின்படி நடப்பவர்கள் பரியாசக்காரர் (3)
12. கள்ளப் போதகர்களின் ___ உறங்காது (3)

### ⬇️ மேலிருந்து கீழ்

1. வாக்குத்தத்தங்கள் மகாமேன்மையும் __யுமானவைகள் (3)
3. அதிக____யான தீர்க்கதரிசன வசனம் நமக்குண்டு (3)
4. பேசாத மிருகம் பேசி யாருடைய மதிகேட்டை தடுத்தது (7)
9. கர்த்தருக்கு ஒரு நாள் ___ வருஷம் போல.... (4)
10. யார் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது (3)

### 🔼 கீழிருந்து மேல்

5. ___யும் அதில் உள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம் (2)
10. சேற்றிலே புரளும் (3)
14. எரிந்து உருகிப்போம் (5)

**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/TGGiLdgHMGZkpr2T6

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 20/07/2026க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

தேவனுடைய வார்த்தையும் ஆவியும் மட்டுமே சபையில் சீர்த்திருத்தத்தை உண்டாக்கும். - W. ராபர்ட் காட்ஃப்ரே

# மனிதரைத் தின்ற மக்களின் அருட்பணியாளர்
# ஜான் பேட்டன் (1824 - 1907)

”நீங்கள் என்னை அம்பு எய்து, சுட்டுக் கொன்று போடலாம். ஆனால் நானோ உங்களுடைய உண்மையான நண்பன். நான் நேசித்து சேவிக்கிற என் ஆண்டவர் இயேசுவிடம் என்னை அதிசீக்கிரத்தில் அனுப்புகிறீர்கள் என்பதைத் தவிர மரணம் என்னை ஒன்றும் செய்யாது. உங்கள் மத்தியில் மரிக்க நான் பயப்படவில்லை” என முழங்கினார் ஜான் பேட்டன். பயங்கர ஆயுதங்களோடு மிருகத்தனமாகத் தன்னைத் தாக்க வந்த மிலேச்சர்கள் நடுவில் தைரியமாய் நின்றார் ஜான் பேட்டன். அன்பும் இரக்கமும் அவர் முகத்தில் காணப்பட, அமைதியும் தைரியமும் உள்ளவராய் முழங்கால்படியிட்டார். கிறிஸ்துவின் அன்பைக் கூற வந்த இத்தெய்வத் தூதுவரை எந்நேரத்திலும் கொல்ல ஆயத்தமாயிருந்தனர் அம்மிலேச்சர்கள்.

### ஆரம்ப வாழ்க்கை:

ஜான் பேட்டன் 1824ஆம் ஆண்டு, ஸ்காட்லாந்தில் தெய்வ பயமிக்க பெற்றோர்களுக்குப் பிறந்தவர். ஜெபவீரரான அவருடைய தகப்பன் வாணிகம் செய்து வந்தார். அவர்களுடைய இல்லத்தில் ஒர் அறை ”பரிசுத்த ஸ்தலம்” என்று அழைக்கப்பட்டது. ஒருநாளில் மூன்று முறை ஜானின் தகப்பனார் அவ்வறைக்குள் சென்று, தன் உள்ளத்தை தேவனுக்கு முன்பாக ஊற்றி விடுவார். தன் குடும்பத்திற்காகவும், ஸ்காட்லாந்து நாட்டிற்காகவும், உலகம் முழுமைக்காகவும் ஊன்றி ஜெபிப்பார். தகப்பனின் சிறந்த தெய்வீக ஜெபவாழ்க்கை ஜானுக்கு சவாலாக அமைந்தது. அவனுடைய பிற்கால வாழ்க்கையில் தன் தகப்பனைப் போல கிறிஸ்துவோடு நடக்க, தீர்மானிக்க உதவியது.

ஜானின் தாயார் சிறந்த விசுவாசமும், பக்தியுமுள்ள பெண்ணாக விளங்கினார். ஒரு சமயம் ஜானின் தகப்பனார் வெளியூர் சென்றிருந்தபோது, வீட்டில் உணவுப்பொருட்கள் தீர்ந்துபோனது. அதைக்கண்டு தாய் பசியோடு ஆகாரம் வேண்டி நிற்கும் தன் அருமை மக்களோடு ஜெபித்து, அவர்களைப் படுக்கைக்கு அனுப்பினார். ”நாளைக் காலை தேவன் நமக்கு ஏராளமான ஆகாரத்தை அனுப்புவார்” என்று உறுதிகூறி, தன் பிள்ளைகளைப் படுக்கைக்கு அனுப்பினார். ஜானின் தகப்பனார் உண்மை நிலை அறியாமலேயே ஏராளமான உணவுப்பொருட்களை அடுத்தநாள் காலை அனுப்பியிருந்தார்.

அதைக்கண்டு அதிசயித்த தன் பிள்ளைகளைப் பார்த்து ஜானின் தாயார், ”அருமை மக்களே! உங்கள் தேவைகளையெல்லாம் ஜெபத்தில் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். பரமபிதாவை நேசியுங்கள். நன்மையான யாவற்றையும் உங்களுக்குத் தந்து, பிதா தம்மை மகிமைப்படுத்துவார்” என்றார். இந்த நிகழ்ச்சியை ஜான் ஒருபோதும் மறக்கவில்லை.

பன்னிரெண்டாம் வயதில் ஜான் தன் தகப்பனுக்கு வாணிபத்தில் உதவி செய்தும், கிரேக்க, லத்தீன் மொழிகளைக் கற்றும் அறிந்தார். இயந்திரங்களையும், இயந்திர சாதனங்களையும் அவர் பயின்று கொண்டது, பிற்காலத்தில் அவர் மிஷனெரியாகப் பணிபுரியும்போது பேருதவியாக இருந்தது. இவைகளுக்கு முன்னதாகவே ஜான், கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தன்னை ஒரு நற்செய்திப் பணியாளனாக ஆயத்தம் செய்ய ஆவல் கொண்டார். கிளாஸ்கோ நகரத்தில் இறையியல் கல்லூரியில் சேரும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. தன்னைப் பயிற்றுவிக்க வீட்டை விட்டு வேதாகமக் கல்லூரியில் சேர்ந்தார்.

தேவனுடைய வார்த்தையானது ஒரு சிங்கத்தைப் போன்றது. ஒரு சிங்கத்தை நீங்கள் பாதுகாக்கத் தேவையில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னவெனில், சிங்கத்தைக் கட்டவிழ்த்து விடுவதுதான். அப்பொழுது அந்த சிங்கம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

கிளாஸ்கோ நகரத்தில் வாழ்க்கை மிகக் கடினமானது. ஜான் மருத்துவம், இறைநூல் ஆகியவற்றைப் படித்துக் கொண்டே, அங்குள்ள ஒரு பள்ளியில் ஆசிரியனாகப் பணி செய்தார். தன் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட உழைத்தார். நகரின் ஒருபிரிவில் உள்ள தாழ்த்தப்பட்டோருக்காக சேவை செய்யும் கிளாஸ்கோ நகர மிஷனெரி ஸ்தாபனத்தில் சேர்ந்து கிறிஸ்தவ சேவையில் ஈடுபட்டார். அநேக ஆண்டுகள் இந்த ஊழியம் அவருக்கு மனச்சோர்வைக் கொண்டு வந்தது என்றாலும், தொடர்ந்து திருப்பணி செய்து வந்தார். பெரிய அளவில் கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் பணிபுரியுமுன், ஒரு சிறிய இடத்தில் பணிபுரிந்து தன் உண்மையை நிரூபித்துக் காட்டினார். பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே, அவருடைய உண்மை ஊழியம் பலன்தர ஆரம்பித்தது. கிறிஸ்துவுக்கென்று அநேகரை ஆதாயப்படுத்தினார். அவர்களில் அநேக குடிகாரர்கள், வேலையற்று சோம்பித் திரிகிறவர்கள், கடவுளைச் சபிக்கிறவர்கள். ஆனாலும், இத்தனை உழைப்பின் மத்தியிலும் தன் கல்லூரிப் படிப்பை ஜான் பேட்டன் தொடர்ந்து கற்று வந்தார்.

பிற நாடுகளில் கிறிஸ்துவை அறியாது அழிந்து கொண்டு இருக்கும் ஜன சமுதாயத்தைப் பற்றி பல ஆண்டுகளாக ஜானுக்கு மனபாரம் இருந்து வந்தது. வெளிநாடுகளில் தெய்வப்பணி செய்ய, கடவுளின் அழைப்பு தனக்கு உண்டு என்பதை உணர்ந்த அச்சமயம், நியூஹெப்ரிட்ஸ் என்னும் தீவுகளில் மிஷனெரி தேவையைப் பற்றிக் கேள்விப்பட்டார். அங்கு ஏற்கனவே பணியாற்றிக் கொண்டிருந்த மிஷனெரியுடன் சேர்ந்து உழைக்க அழைப்புப் பெற்றார். வேறு யாரும் போக விரும்பாத நிலையில் தேவ அழைப்பு ஜானுக்குக் கிடைத்தது. "இதுவரை வேறு எவரும் ஒப்புக் கொடுக்காததால் நீயே எழுந்து உன்னை அர்ப்பணி"என்ற தெய்வ தூண்டுதலை உடனே ஏற்று ஜான் தன்னை அர்ப்பணித்தார். மிஷனெரி சங்கமும் ஏற்றுக்கொண்டது.

ஆனால் கிளாஸ்கோ நகர மிஷன் ஸ்தாபனம் அவரை வெளிநாடு செல்ல அனுமதிக்கவில்லை. அவருக்கு அறிமுகமானவர்களும், நண்பர்களும், அவரைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தனர். ஏற்கனவே நல்லதொரு திருப்பணியைச் செய்து வருகிறார். ஏன் இவர் மிலேச்சர்களிடம் செல்ல வேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு வயோதிபர் : "போக வேண்டாம், இளைஞனே நரமாமிச பட்சினிகள் உன்னைத் தின்றுவிடுவார்கள்" என்றார். அதற்கு ஜான் பேட்டன் சிரித்தபடியே பதிலளித்தார், "பெரியவரே, நீங்கள் வயது சென்று சில நாட்களில் மரித்து அடக்கம் செய்யப்படலாம். மண்ணுக்கடியில் புழுக்கள் அரித்து சாப்பிடும். நான் கிறிஸ்து இயேசுவை கனப்படுத்தி கீழ்ப்படிந்து அவரைச் சேவிக்கும்போது மனிதர் சாப்பிட்டால் என்ன? புழுக்கள் அரித்தால் என்ன?"என்றார். ஜானின் பெற்றோர் அவரைத் தெய்வ நடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து ஊழியத்தைத் தெரிந்து கொள்ளும்படி விரும்பினார்கள். ஜான் பேட்டன் தன் மனைவியுடன் நியூஹெப்ரிட்ஸ் செல்ல, 1858ஆம் ஆண்டு கப்பல் ஏறினார். அப்போது அவருக்கு வயது 34.

### நியூஹெப்ரிட்ஸ் நரமாமிசப் பட்சினியரின் தீவுக்கூட்டம்

தென்பசிபிக் கடலில், ஆஸ்திரேலியாவிலிருந்து 1400 மைல்கள் வடகிழக்காக அமைந்துள்ள தீவுகளின் கூட்டமே இந்த நியூஹெப்ரிட்ஸ் எனப்படும் இடம். இங்கு வாழ்ந்து வந்த மக்கள் மிலேச்சர்களாகவும், பண்பாடு அற்றவர்களாகவும் இருந்தனர். பயங்கர கொடுமைகள் புரிந்து மனித மாமிசத்தைப் புசிக்கிறவர்களாகவும் காணப்பட்டனர். ஒரு ஆளைக் கொல்வது அவர்களுக்கு சர்வ சாதாரணம். அதிக கொலைகளைச் செய்ததினால் தைரியசாலிகளாவது அல்ல. அசுத்த ஆவிகளைப் பற்றிய பயமே அவர்களைக் கொலை செய்யத் தூண்டியது. அசுத்த ஆவிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்க அநேக விக்கிரகங்களையும், மந்திரங்களையும், மந்திரவாதிகளையும் ஏற்படுத்தியிருந்தனர். இந்த மந்திரவாதிகள் அதிக அதிகாரத்தையும், செல்வாக்கையும் பெற்றிருந்தனர்.

இயற்கை மரணம் உண்டு என்பதையே அறியாதிருந்தனர். ஒருவன் மரித்துவிட்டால் அது பில்லிசூனியத்தால் ஏற்பட்டது என்று நம்பினர். ஒருவன் மரித்தவுடன் எல்லாரும் கூடி "யார் இந்த மரணத்தை வருவித்தது" என்று தீர்மானிப்பார்கள். செத்துப்போனவனுக்கு எதிரியாக இருந்த ஒருவனைக் கடைசியில் கண்டுபிடித்து, அவனைச் சுட்டுத்தள்ள அவர்கள் தலைவன் ஒரு இளைஞனுக்குக் கட்டளையிடுவான். (அத்தீவுகளுக்கு வரும் வியாபாரிகளிடமிருந்து, இந்த மிலேச்சர்கள் துப்பாக்கியைப் பெற்றிருந்தனர்). எதிரியாக நினைத்தவனைச் சுட்டுக் கொன்ற வாலிபனை, சுடப்பட்டு இறந்தவனின் நண்பர்கள் சுட முயற்சிப்பார்கள். இப்படியாக இத்தீவின் மிலேச்ச இனமக்கள் அனைவரும் அழியும்வரை ஒருவரையொருவர் சுட்டுக் கொல்வார்கள். ஒருவன் இறந்ததால் ஏற்பட்ட இழப்பு, அவ்வினத்தையே அழிக்கும் நிலையை ஏற்படுத்திவிடும். கணவன் மரிப்பானேயாகில் மனைவியையும் கழுத்தை நெறித்துக் கணவனுடைய பிரேதக் குழியிலேயே போட்டுவிடுவார்கள். வயதான முதியவர்கள் அவர்களுக்குப் பாரமாக இருப்பதால் அடித்துக் கொன்று விடுவார்கள். பேய்களையும், முன்னோர்களின் ஆவிகளையும் வணங்கினர். கிறிஸ்துவைப் பற்றி ஒருபோதும் கேள்விப்படாதவர்கள்.

கிறிஸ்தவ மிஷனெரிகள் இப்படிப்பட்ட மக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றனர். முதல் மிஷனெரிகள் அங்கு இறங்கியவுடனே, அடித்துக் கொல்லப்பட்டு புசிக்கப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து சென்ற மற்ற மிஷனெரிகளும் கொல்லப்பட்டனர். அல்லது விரட்டப்பட்டனர். ஆனால் ஜான் பேட்டன் இத்தீவுகளுக்கு வருகை தந்தபோது இரண்டு மிஷனெரி தம்பதிகள் இத்தீவுகளில் தங்கி, பெரிய ஆபத்துகளுக்கு மத்தியிலும் ஊழியம் செய்து வந்தனர். மனந்திரும்பிய ஒரு சிலரே இருந்தனர்.

**"டான்னா"** எனப்படும் ஒரு தீவு, நியூஹெப்ரிட்ஸ் தீவுக்கூட்டங்களில் ஒன்றாகும். இங்கு வேதவசனமாகிய விதையை ஊன்றும்படி எடுத்த எல்லா முயற்சிகளையும் முறியடித்தனர் மந்திரவாதிகள். இம்மந்திரவாதிகள் சுவிசேஷம் சொல்லப்பட பெரிய தடையாயிருந்தனர். தீவு மக்கள் நற்செய்தியை நம்பி ஏற்பார்களானால் தங்களுடைய சகல ஆதிக்கமும் அழிந்துவிடும் என்று அறிந்திருந்தனர். இயற்கையின் சீற்றங்களும் இன்னல்களும் நேரும்போது, அதற்கு மிஷனெரிகளே காரணம் என்று சொல்லி அவர்களைக் கொலை செய்ய ஏவினர். வெள்ளைக்கார வியாபாரிகளும் இத்தீவு மக்களை மிஷனெரிகளுக்கு எதிராகத் தூண்டிவிட்டனர். காரணம் யாதெனில், இங்கு வரும் வியாபாரிகள் தீவு மக்களை ஏமாற்றி, தீவுச் செல்வங்களை அபகரித்துச் சென்றனர்.

இப்படிப்பட்ட தீவில்தான் ஜான் பேட்டனும், அவர் மனைவியும் வந்து இறங்கினர். டான்னா தீவில் கால் வைத்ததும் பேட்டன் அவர்கள், பல வர்ணங்களைத் தங்கள் மேல் பூசிக்கொண்டு இருந்த காட்டு மிராண்டிகள் அமைதலாய் இருப்பதைக் கண்ணுற்றார். அத்தீவு மக்கள் அவரையும், அவர் கொண்டு வந்திருந்த பொருட்களையும் பார்ப்பதில் அதிக ஆர்வமுள்ளவர்களாய் இருந்தனர். பேட்டன் தம்பதிகள் மரவீட்டைத் தங்களுக்கு அமைப்பதில் ஈடுபட்டிருக்கும் பொழுது, ஒரு மைல் தள்ளி நரமாமிச விருந்து நடனம் நடந்து கொண்டிருந்தது. மிகுந்த மனபாரத்தோடு இத்தீவின் மக்களின் இரட்சிப்புக்காகப் பாடுபட்டார் பேட்டன்.

டான்னா தீவின் மக்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. ஜான் சைகை மூலமே அவர்களோடுப் பேசினார். மிகுந்த பிரயாசப்பட்டு இரண்டு கேள்விகளுக்கு டான்னா மொழியில் வார்த்தையைக் கண்டுபிடித்தார். அவை, **"இது என்ன?", "உன் பெயர் என்ன?"** என்பதே. தொடர்ந்து இவ்விரு கேள்விகளையே கேட்டு பேட்டன் அத்தீவு மக்களின் மொழியிலுள்ள பல பெயர்களையும் சொற்களையும் அறிந்து கொண்டு அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்டார்

**--தொடரும்--**

**[தியோடர் வில்லியம்ஸ் எழுதிய "சிலுவையின் ஊழியர்கள்" (IEM Outreach பப்ளிகேஷன்ஸ்) என்னும் புத்தகத்திலிருந்து]**



## உங்களுக்குத் தெரியுமா?

### பூமியில் உயிரின் இரகசியம் என்ன?

### (பகுதி 2 – சூரியன்)

பூமியில் உயிர் வாழ்வது, சூரியனுடன் தொடர்புடைய ஒரு துல்லியமான நிபந்தனைகளின் தொகுப்பை பெரிதும் சார்ந்துள்ளது.

1. சூரியனிலிருந்து உள்ள தூரம் (சுமார் 149.6 மில்லியன் கி.மீ.)

பூமியை "வாழத் தகுந்த மண்டலத்தில்" வைக்கிறது.

பூமி இன்னும் அருகில் இருந்தால், கடல்கள் ஆவியாகிவிடும். இன்னும் தொலைவில் இருந்தால், நீர் உறைந்துவிடும்.

2. நிலையான சூரியக் கதிர்வீச்சு (பூமியின் மேற்பரப்பின் ஒரு சதுர மீட்டருக்கு 1361 வாட்).

அதிகப்படியான கதிர்வீச்சு → தீவிர வெப்பமயமாதல். மிகக் குறைவான கதிர்வீச்சு → உலகளாவிய உறைபனி.

3. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை (5778 கெல்வின்)

இந்த வெப்பநிலை, ஒளிச்சேர்க்கை, காலநிலை சமநிலை மற்றும் உயிரியல் செயல்முறைகளுக்குத் தேவையான சரியான நிறமாலையிலான கண்ணுக்குப் புலப்படும் ஒளியை உருவாக்குகிறது.

சூரியனைப் பற்றிய மேற்கூறிய மற்றும் இன்னும் பல காரணிகள் பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு அவசியமானவை.

**இந்தக் காரணிகள் அனைத்தும் துல்லியமாக எவ்வாறு ஒன்றிணைந்தன? அறிவியலுக்கு இதற்கான பதில் இல்லை, ஆனால் வேதாகமத்திடம் உள்ளது.**

**வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச்செய்து படைத்து**, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை. ஏசாயா 45:18(ஏசாயா 45:18).

**பிரபஞ்சத்தின் மற்றும் மனித வாழ்வின் அற்புதங்களைப் புரிந்துகொள்ள வேதாகமத்தைப் படியுங்கள்.**



### உங்களுக்கு தெரியுமா?

**பெருமையின் காரணமாக மிருகம்போல் வாழ நேர்ந்த ராஜா யார்?**

நேபுகாத்நேச்சார் ராஜா தனது பெருமையினால் புத்தி இழந்து காட்டுமிருகம்போல் வாழ்ந்தார். பின்னர் தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்திக்கொண்டபோது மீண்டும் மகிமை பெற்றார் (தானியேல் 4:33-37).

### உங்களுக்குத் தெரியுமா?

**தனது பாவம் வெளிப்படுத்தப்பட்ட பிறகு மனந்திரும்புதலின் பாடலை எழுதிய ராஜா யார்?**

தாவீது ராஜா, பத்சேபாளுடன் செய்த பாவத்தை தீர்க்கதரிசி நாத்தான் சுட்டிக்காட்டியபின் சங்கீதம் 51-ஐ எழுதினார். அது வேதாகமத்தில் காணப்படும் மிக வல்லமையான மனந்திரும்புதல் ஜெபங்களில் ஒன்றாகும் (சங்கீதம் 51).



தேவனுடைய வார்த்தையைக் கேட்பவர் சாப்பிட்ட பின் உணவை அசைபோடுகிற விலங்குகளைப் போல இருக்க வேண்டும். அவர் தேவனுடைய வார்த்தையை உணவாக மட்டும் எடுத்துக் கொள்ளாமல், அதை சிந்தித்து தியானிக்க வேண்டும். - அகஸ்டின்

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.4K சந்தாதாரர்களையும் 301 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.




CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

பிரகாசமான தருணங்களிலும் மற்றும் பிரச்சனைகளில் இருக்கும்போதும் பரிசுத்த வேதாகமத்திற்கு நேராகச் செல்லும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ளாவிடில், நம்மால் வேதம் தரும் ஆறுதல்களுக்கு முழுமையாக பதிலளிக்க முடியாது. ஏனெனில், நாம் இருளுக்கும் ஒளிக்கும் இடையே உள்ள சமநிலையில் குறைவு உள்ளவர்களாக இருக்கிறோம். - ஹெலன் கெல்லர்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

30 June 2026 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்





















உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். - சங்கீதம் 119:103

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 21

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: 2 பேதுரு**

1



2



3



4



5



6



7



8



9



10



https://forms.gle/X8CCxV7f6wS7DMxX6

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 20/07/2026 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 20 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 20, 1 பேதுரு - இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 20

1. Jance.J
2. ரேச்சல். கு
3. காயத்ரி இவாஞ்சலின்
4. R Josephine
5. Ruby jenet
6. N.Mary-Agnes
7. P.selvakumari
8. Kiruba Johnson
9. Amutha Jegan
10. கிறிஸ்டி ஜோசப்
11. Nirmala Beniel
12. D. Renuka

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 20

1. Amutha Jegan
2. கிறிஸ்டி ஜோசப்
3. Nirmala Beniel
4. D. Renuka

தேவனுடைய வார்த்தையை வாசித்து, ஜெபம் செய்து தேவனுடன் நேரம் செலவிடவேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்கும்போது, பொறுமையும் அதைச் செய்வதற்கான சக்தியும் மிகவும் முக்கியமானது ஆகும். - பாலின் கிரீடன்

# பதில்கள்

**கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகமம் விளையாட்டு - 20 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 20**
**1 பேதுரு-இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 20

➡️ இடமிருந்து வலம்

1. பொன் (1:7)
3. பலன் (1:9)
5. கண்கள் (3:12)
9. அன்பு (4:8)
11. முடிவு (4:7)
12. சில்வானு (5:12)

⬅️ வலமிருந்து இடம்

6. சாராள் (3:6)
8. மாம்சம் (1:24)
15. திருவசனம் (2:3)

⬇️மேலிருந்து கீழ்

2. முகம் (3:12)
4. வஞ்சனை (2:22)
7. நன்மை (3:17)

🔼 கீழிருந்து மேல்

13. ஆத்துமா (2:11)
14. தேவனை (3:15)

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 20

1)1 பேதுரு 2:21
2)1 பேதுரு 1:24
3)1 பேதுரு 3:22
4)1 பேதுரு 5:8
5)1 பேதுரு 5:6
6)1 பேதுரு 4:7
7)1 பேதுரு 2:3
8)1 பேதுரு 5:7
9)1 பேதுரு 3:4
10)1 பேதுரு 1:7


## ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி


நாம் ஆவிக்குரிய எழுப்புதல்களைக் காண விரும்பினால், தேவனுடைய வார்த்தை மீதான நம் பயபக்தியை நாம் உயிரோட்டமுள்ளதாக மாற்ற வேண்டும். - சார்லஸ் ஸ்பர்ஜன்

# 2 பேதுரு

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 67
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 67
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பேதுரு
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- பேதுருவின் முதல் கடிதம் போல் இதுவும் கடிதபாணியில் அமைந்துள்ளது. யூதா கடிதத்தோடு இது நெருங்கிய தொடர்புடையது. பிற்கால கடிதமாக இருப்பதால் இது கிறிஸ்துவைப்பற்றிய வளர்ச்சியடைந்த கிறிஸ்தவக் கருத்துக்களைக் குறிப்பிடுகிறது.

## சூழலும் நோக்கமும்

- அக்காலத்தில் பல போலிப்போதகர்கள் தோன்றி உண்மையைத் திரித்து மக்களைத் தவறான நெறியில் வாழத் தூண்டினர் (2:2). இச்சூழ்நிலைதான் இக்கடிதத்தை எழுத வைத்தது. திருச்சசபைகளுக்குள் பொய் போதகர்கள் ஊடுருவ ஆரம்பித்ததைக் கண்ட பேதுரு, பரவிவரும் விசுவாச துரோகத்தைக் கண்டறிந்து எதிர்த்துப் போராடுவதற்கு கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் வளரவும் வலுவாகவும் இருக்கவும் அழைப்பு விடுத்தார். தேவனுடைய வார்த்தையின் நம்பகத்தன்மையையும் கர்த்தராகிய இயேசுவின் உறுதியான வருகையையும் அவர் கடுமையாக வலியுறுத்தினார்.

## முக்கிய வசனங்கள்

2 பேதுரு 1:3-4, 2 பேதுரு 3:9, 2 பேதுரு 3:18

## புத்தகத்தின் சுருக்கம்

- வாசகர்கள் தேவனைப்பற்றியும் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் உண்மையான அறிவைப் பெற வேண்டுமென்றும், இந்த அறிவு இயேசுவை நேரில் பார்த்தும் அவர் போதனைகளைக் கேட்டும் இருந்த அப்போஸ்தலர்களால் தரப்பட்டுள்ளது என்றும், கிறிஸ்து இனி வரமாட்டார் என சிலர் பேசி வந்ததால் அவர் திரும்ப வருவது உறுதி என்பதை மீண்டும் பேதுரு வலியுறுத்துகிறார். எவரும் அழிந்து விடாமல் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கிறிஸ்து வரக் காலம் தாழ்த்துகிறார் என்கிறார் பேதுரு. ஆண்டவரின் நேரம் குறைவாக இருந்ததாக எண்ணி (2 பேதுரு 1:13-15) திருச்சபைகள் உடனடி ஆபத்தை எதிர்கொண்டபோது (2 பேதுரு 2:1-3) பேதுரு வாசகர்களை தங்கள் நினைவுகளைப் புதுப்பிக்கும்படி அழைப்பு விடுத்தார் (2 பேதுரு 1:13, 2 பேதுரு 3:1-2). அவர்கள் அவருடைய போதனைகளை நினைவில் கொள்ளவேண்டும் (2 பேதுரு 1:15) எனவும், குறிப்பிட்ட கிறிஸ்தவர்களின் நற்பண்புகளைச் சேர்ப்பதன் மூலம் விசுவாசத்தில் முதிர்ச்சியடையும்படியும் விசுவாசிகளுக்கு அவர் சவால் விடுத்தார். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அவர்களின் விசுவாசத்திற்கான அதிகாரமாக முன்வைக்கப்பட்டனர் (2 பேதுரு 1:12-21, 3:2, 3:15-16). எனவே திருச்சபைகளுக்குள் நுழைந்து மோசமாகப் பாதித்த போலி போதகர்களைத் தாக்குவதற்கு அவர்கள் தங்கள் விசுவாசத்தில் வலுவாக இருக்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அவர்களைக் கண்டிக்கையில் அவர்களின் நடத்தை மற்றும் குணாதிசயங்களை பேதுரு விவரித்தார் (2 பேதுரு அதிகாரம் 2). மேலும் அந்த போலிப்போதகர்கள் தேவனின் இரண்டாம் வருகையை கேலி செய்தார்கள் (2 பேதுரு 3:3-7). எனவே கிறிஸ்தவர்களுக்கு இரண்டாம் வருகை பரிசுத்த வாழ்வுக்கான ஊக்கம் என்று பேதுரு கற்பித்தார் (2 பேதுரு 3:14). ஒரு இறுதி எச்சரிக்கைக்குப் பிறகு, பேதுரு மீண்டும் அவர்களைத் தங்கள் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அறிவிலும் வளர ஊக்குவித்தார்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- பொய்யான தீர்க்கதரிசிகளைக் கண்டனம் செய்வதில், பேதுரு பழைய ஏற்பாட்டுக் கருப்பொருளை மீண்டும் கூறுகிறார். அது அவருடைய வாசகர்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆரம்பகால கிறிஸ்தவர்களில் பலர் மதம் மாறிய யூதர்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் நன்கு கற்பிக்கப்பட்டனர். 2 பேதுரு 1:19-21 ல் பழைய ஏற்பாட்டின் "தீர்க்கதரிசிகளின் வார்த்தையை" பேதுரு குறிப்பிடும் போது, ஆண்டவர் பொய்யான தீர்க்கதரிசிகளைக் கண்டித்தார் என்றும், உண்மையான தீர்க்கதரிசிகள் அவர்கள் மூலம் பேசிய பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டார்கள் என்று உறுதிப்படுத்தினார் (2 சாமு 23 :2). "தங்கள் மனதின் மாயைகளை தீர்க்கதரிசனம் சொல்லும் இந்த பொய் தீர்க்கதரிசிகளின் இதயங்களில் இது எவ்வளவு காலம் தொடரும்?" (எரே 23:26) என்று கேட்பதில் மூலமாக பொய்யான தீர்க்கதரிசிகளை விமர்சிப்பதில் எரேமியாவும் வலுவாக இருந்தார். தெளிவாக, பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களைப் பாதித்த அதே ஏமாற்றும் பொய் ஆசிரியர்கள் இன்றும் நம்முடன் இருக்கிறார்கள், பேதுருவின் இரண்டாவது நிருபம் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போலவே இன்றும் நமக்குப் பொருந்துகிறது.

## நடைமுறைப் பயன்பாடு

நிச்சயமாக, இந்த கடிதம் எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களை விட, 21 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய கர்த்தரின் வருகைக்கு மிகவும் அருகில் இருக்கிறோம். தொலைக்காட்சி மற்றும் பிற வெகுஜன தகவல்தொடர்பு வழிகள் மூலம், முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் பலர் உண்மையான கிறிஸ்தவ தலைவர்களாக அணிவகுத்து வருகிறார்கள் என்பதையும், முதிர்ச்சியடையாத கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் தவறான விளக்கத்தால் "ஈர்க்கப்பட்டுள்ளனர்" என்பதையும் அறிந்திருக்கிறோம். மறுபடியும் பிறந்த அனைத்து கிறிஸ்தவர்களும் கர்த்தருடைய வார்த்தையில் மிகவும் அடித்தளமாக இருக்க வேண்டும், அப்போதுதான் நாம் பிழையிலிருந்து சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியும். பேதுரு கொடுத்த விசுவாசத்தின் வளர்ச்சிக்கான அதே மருந்தை (2 பேதுரு 1:5-11), நாம் நம் வாழ்வில் பயன்படுத்தப்படும்போது, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நித்திய ராஜ்யத்தில் ஒரு உயர்ந்த வெகுமதி நமக்கு கிடைக்கும் (2 பேதுரு 1 :10-11). நம்முடைய விசுவாசத்திற்கான அடித்தளம் எப்போதும் பேதுரு பிரசங்கித்த அதே தேவனுடைய வார்த்தையாகவே இருக்க வேண்டும் .

## நூலின் அமைப்பு

1) முன்னுரை (வாழ்த்து) 1:1 - 2
2) கிறிஸ்தவ அழைப்பு 1:3 - 21
3) போலி தீர்க்கதரிசிகளும் போலி போதகர்களும் 2:1 - 22
4) ஆண்டவருடைய வருகை 3:1 -18

தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

# பஞ்சாபி வேதாகமத்தின் வரலாறு

**- போதகர். ஜாராஸ் மசிஹ்**




பஞ்சாபி வேதாகமத்தின் வரலாறு, மொழி மற்றும் கலாச்சாரத் தடைகளைத் தாண்டி, பரிசுத்த வேதாகமத்தை பஞ்சாபி மொழி பேசும் மக்களிடம் கொண்டு சேர்க்க அர்ப்பணிப்புடன் உழைத்த மிஷனரிகளின் மகத்தான பணியை எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பயணம் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரம்பமாகி, இன்று பல நவீன மொழிபெயர்ப்புகளின் மூலம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது.

### மொழிபெயர்ப்பின் முன்னோடிகளும் காலவரிசையும் (1815–1832)

பஞ்சாபி வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு பெரும்பாலும் பிரிட்டிஷ் மிஷனரிகளின் முயற்சியாகும். இதில் முக்கிய பங்காற்றியவர்கள்:

·**வில்லியம் கேரி (William Carey):** இங்கிலாந்தைச் சேர்ந்த மிஷனரி. 1793-ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு வந்து, பஞ்சாபி வேதாகம மொழிபெயர்ப்பு பணிக்கு தலைமை தாங்கினார்.

·**ஜோஷுவா மார்ஷ்மேன் (Joshua Marshman)** மற்றும் **வில்லியம் வார்ட் (William Ward)**: 1799-ஆம் ஆண்டு இந்தியா வந்து, வில்லியம் கேரியுடன் இணைந்து மொழிபெயர்ப்பு பணியில் முக்கிய பங்கு வகித்தனர்.

·**ஜான் நியூட்டன் (John Newton):** அமெரிக்க மிஷனரி. 1835-ஆம் ஆண்டு இந்தியா வந்து, லூதியானாவில் தங்கி, மொழிபெயர்ப்பு மற்றும் திருத்தப் பணிகளில் முக்கிய பங்களிப்பைச் செய்தார்.

மொழிபெயர்ப்பு சில கட்டங்களாக வெளியிடப்பட்டது:

·1815 – புதிய ஏற்பாடு முதன்முதலாக மொழிபெயர்க்கப்பட்டது.

·1820 – பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

·1832 – முழுமையான பஞ்சாபி வேதாகமம் நிறைவுபெற்று விநியோகத்திற்குத் தயாரானது.

### மொழிபெயர்ப்பின் மூல மொழிகள்

பஞ்சாபி வேதாகமம் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்படவில்லை. அது வேதாகமத்தின் அசல் மொழிகளிலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டது.

·**பழைய ஏற்பாடு –** எபிரெய மொழி (Hebrew) மற்றும் அராமிய மொழி (Aramaic)

·**புதிய ஏற்பாடு** – கொய்னே கிரேக்க மொழி (Koine Greek)

### பஞ்சாபி வேதாகமத்தின் பல்வேறு பதிப்புகள்

இதுவரை சுமார் 8 வெவ்வேறு பஞ்சாபி வேதாகம பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை:

·**BSI Old Version –** இன்று மிகவும் பரவலாக வாசிக்கப்படும் பதிப்பு.

·**Punjabi Standard Version (PSB) –** பரவலாகப் பயன்படுத்தப்படும் சமகால மொழிபெயர்ப்பு.

·**Easy to Read Version (ERV) –** எளிய மொழிநடையில் வடிவமைக்கப்பட்ட பதிப்பு.

·**Biblical Open Punjabi Contemporary Version (OPCV)** – நவீன மொழியில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மொழிபெயர்ப்பு.

·**Indian Revised Version (IRV) –** திருத்தப்பட்ட முக்கியமான பதிப்பு.

·**Gurmukhi Version –** ஒருகாலத்தில் பிரபலமாக இருந்தது, தற்போது அச்சிடப்படுவதில்லை.

·**Common Language (CL) Version –** பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டது.

### மொழிபெயர்ப்பில் எதிர்கொண்ட சவால்கள்

ஆரம்பகால மொழிபெயர்ப்பாளர்கள் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டனர்.

**1. மொழித் தடைகள்**

இந்த மிஷனரிகள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். ஆரம்பத்தில் அவர்களுக்கு பஞ்சாபி மொழி தெரியாது. எனவே எபிரெய மற்றும் அராமிய மொழிகளில் உள்ள கருத்துகளை, தாங்கள் கற்றுக்கொண்டிருந்த பஞ்சாபி மொழியில் துல்லியமாக வெளிப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது.

**2. கலாச்சார வேறுபாடுகள்**

வேதாகமத்தில் உள்ள பல சொற்கள் மற்றும் கருத்துகளுக்கு பஞ்சாபி மொழியில் நேரடி இணையான சொற்கள் கிடைக்கவில்லை. வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பு செய்தால், உண்மையான பொருள் வெளிப்படாமல் போய்விடும் அபாயம் இருந்தது.

மேலும், அந்நாள்களில் இயல்பான மொழிபெயர்ப்பை உருவாக்க உதவும் உள்ளூர் அறிஞர்களோ அல்லது மொழி ஆதாரங்களோ மிகவும் குறைவாக இருந்தன.

### அச்சிடுதல் மற்றும் விநியோகம்

முதன்முதலில் பஞ்சாபி வேதாகமம் கொல்கத்தாவில் உள்ள செராம்பூர் அச்சகத்தில் (Serampore Press) அச்சிடப்பட்டது.

பின்னர் வேதாகமச் சங்கம் (Bible Society) பெங்களூருவில் ஒரு அச்சகத்தை நிறுவியது. இன்றும் பெரும்பாலான பஞ்சாபி வேதாகமங்கள் அங்கு அச்சிடப்பட்டு உலகம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

### நவீன திருத்தங்களின் அவசியம்

இன்றைய வேதாகம அறிஞர்கள், பஞ்சாபி வேதாகமத்திற்கு மேலும் நவீன திருத்தங்கள் அவசியம் என்று வலியுறுத்துகின்றனர்.

தற்போது பயன்பாட்டில் உள்ள பல பதிப்புகள் 1832-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, இன்றைய மொழிநடை, சொற்களின் பயன்பாடு மற்றும் இலக்கண வளர்ச்சிக்கு ஏற்ப அவற்றை புதுப்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

மேலும், புதிய தலைமுறை வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில், வேதாகமத்தின் செய்தி தெளிவாகவும், துல்லியமாகவும், கலாச்சார ரீதியாகப் பொருத்தமாகவும் இருப்பதற்காக, புதிய அறிஞர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் இந்தப் பணியில் தொடர்ந்து பங்களிக்க வேண்டியது மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது.

**- போதகர். ஜாராஸ் மசிஹ்**

## உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:

பிரைஸ் தி லார்ட். என்னுடைய பெயர் ஜெயராணி. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். சிறுவயதிலிருந்தே வேதாகம வாசிப்பு என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.

## இதுவரை நீங்கள் முழு வேதாகமத்தையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?

நான் பலமுறை வேதாகமத்தை வாசித்திருக்கிறேன். ஆனால் ஆரம்பத்தில் அதை ஒரு கடமையாகவே வாசித்தேன். குறிப்பாக சங்கீதம் மற்றும் நீதிமொழிகள் புத்தகங்களுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தேன். கொரோனா காலத்தில் என்னுடைய அண்ணன் மூலமாக GODependence வேதாகம வாசிப்பு திட்டம் எனக்கு அறிமுகமானது. அதன் பிறகு ஒரு மாதம், இரண்டு மாதம் மற்றும் ஒரு வருட வேதாகம வாசிப்பு திட்டங்களில் இணைந்து பலமுறை முழு வேதாகமத்தையும் வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

## GODependence திட்டத்தின் மூலம் வேதாகம வாசிப்பில் எப்படி ஆர்வம் உருவானது?

GODependence திட்டத்தின் மூலம் வேதாகமத்தை ஒழுங்காகவும் தொடர்ந்து வாசிக்கும் பழக்கம் உருவானது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல், வசனங்களை ஆழமாக தியானிக்கவும் இந்த திட்டம் எனக்கு உதவியது. குறிப்பாக நான் முன்பு அதிகம் வாசிக்காத பழைய ஏற்பாட்டு பகுதிகளை ஆர்வத்துடன் வாசிக்கத் தொடங்கினேன். அதன் மூலம் தேவனைப் பற்றியும், அவருடைய கிருபை, இரக்கம், கட்டளைகள், எச்சரிப்புகள் மற்றும் வழிநடத்துதலைப் பற்றியும் அதிகமாக அறிந்துகொள்ள முடிந்தது.

## வேதாகம வாசிப்பின் மூலம் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் என்ன?

“வேதத்துக்கு செவிகொடுக்காமல் தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பாயிருக்கும்” என்ற வசனம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நான் செய்யும் ஜெபம் தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படாததாக இருக்கக்கூடும் என்பதை உணர்ந்தேன். அதன்பிறகு வேத வசனங்களின்படி வாழ முயற்சி செய்து வருகிறேன். பல சூழ்நிலைகளில் தேவன் தமது வசனங்களின் மூலம் என்னை ஆறுதல் அளித்து, தேற்றி, வழிநடத்தி வருகிறார்.

## இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எல்லோருமே கண்டிப்பாக வேதாகமத்தை வாசிக்க வேண்டும். அதன் மகத்துவத்தை அறிந்து, அதிலுள்ள வசனங்களை நமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆகாரம் தேவனுடைய வார்த்தை மட்டுமே. வேத வசனங்களை வாசித்து தியானிப்பதன் மூலமாகவே இந்த உலகத்தில் வெற்றிகரமாக வாழவும், உலகத்தை ஜெயிக்கவும் முடியும். எனவே அனைவரும் இதுபோன்ற வேதாகம வாசிப்பு திட்டங்களில் இணைந்து தங்களுடைய வேதாகம வாசிப்பை ஒழுங்குபடுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். தேவனுடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.



பயன்படுத்தப்படாமல் அழுக்கடைந்த வேதாகமங்களுடன் பின்மாற்றம் துவங்குகிறது.
- சார்லஸ் ஸ்பர்ஜன்

# GODependence நிகழ்வுகள்

## 1
## ஜூன் 2026 ல் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகள் (Bible Readathons)




கடந்த மாதத்தில் 27 ஜூன் 2026 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3:00 மணி முதல் 3:00 மணி வரை (இந்திய நேரம்) தெலுங்கு மொழியில் Bible Readathon சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாதத்தில் 31 ஜூலை 2026 வெள்ளிக்கிழமை அன்று மாலை 4:00 மணி முதல் 8:00 மணி வரை (இந்திய நேரம்) மலையாளம் மொழியில் Bible Readathon நடைபெற உள்ளது.

நல்ல இணைய வசதியுடன், மலையாளத்தில் சரளமாக வேதாகமம் வாசிக்கக் கூடியவர்களை இந்த நிகழ்வில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம்.

## 2
## வேதவாசிப்புச் சவால் குழுக்கள் (BRC) நேபாளி மொழியில் - ஜூலை 2026 முதல்



10 மொழிகளில் நடைபெற்று வரும் நமது வேதவாசிப்புச் சவால்கள் தற்போது ஜூலை 2026 முதல் நேபாளி மொழியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

10 பேருடன் 4 குழுக்களாக ஆரம்பிக்கப்பட்டுள்ள, இந்த நேபாளி மொழி வேதவாசிப்புச் சவால்களில் ஒவ்வொரு மாதமும் புதிய நபர்கள் பங்கேற்று, இவை தொடர்ச்சியாக நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## 3
## GODependence கருத்தரங்கு - ஜூலை 2026




இந்த மாதத்திற்கான கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட இயலவில்லை… கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த மாதம் ஒரு பயனுள்ள தலைப்பில் இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்படும்.

## 4
## வேத தியான குழுக்கள் (BMG) - 15 ஜூலை 2026 முதல்



கடந்த இரு மாதங்களாக நடைபெற்ற GODependence கருத்தரங்கு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, 15 ஜூலை 2026 முதல் ஆரம்பிக்கும் நமது வேதாகம தியானக் குழுக்களில் இணைய விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணைப்பில் என்று இணைந்து இப்போதே இணைந்து கொள்ளுங்கள்…

CLICK HERE https://chat.whatsapp.com/LowUOPS6Q9M8e536UlOfZ1

இது பற்றிய விபரங்கள் இந்த மாத செய்திமடலின் பக்கம் 11 இல் பகிரப்பட்டுள்ளன. மேலும் கூடுதல் விவரங்கள் மற்றும் வேத தியானக் குழுக்களில் கொடுக்கப்படும்.


FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

GODependence

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் கான்ட்